# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரம் உதவிக் கருத்தரங்கு – 2013

**வணிகக் கல்வி – 1** **நேரம் :– இரண்டு மணித்தியாலம்**

**கல்வி அமைச்சின் வர்த்தகம், வணிகக்கல்விக் கிளையின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டது**

**அறிவுருத்தல்:–**

**1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

**2. இல 01 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வினாவிற்கு முன்னாலுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக**

**3. இல. 31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**4. இல. 41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு உறுதியான விடைகளை எழுதுக.**

முழுப்பதிப்புரிமைக்குரியது.

---

**01.** விருப்பத்தில் காணக்கூடிய பண்பினை மாத்திரம் உள்ளடக்கிய விடையாக அமைவது

1. பொதுவாக அமைதல், மட்டுப்படுத்தப்பட்டதாகவும், ஆக்கக்கூடியதாகவும் அமைதல்
2. வரையறுக்கப்படாமை, பொதுவாகவும், பிறப்பிடனும் உருவாதல்
3. ஆரம்பமாக அமைதல், நபர்சார்பானதாகவும், பல்வகையாகவும் இருத்தல்
4. பலவகையாதல், வரையறுக்கப்படாததாகவும் ஆக்கக்கூடியதாகவும் காணப்படல்
5. வரையறுக்கப்பட்டதாகவும், இடைநிலையாகவும், நபர்சார்பானதாகவும் அமைதல் (……)

**02.** வணிகம் அடிப்படையாகப் பிரிக்கப்படும் முறைமினைச் சரியாகக் காட்டுவது கீழ்காணப்படும் எந்த விடையாகும்

1. வியாபாரமும் துணைச்சேவைகளும்
2. கைத்தொழிலும் வர்த்தகமும்
3. கைத்தொழிலும் வியாபாரமும்
4. வியாபாரமும் வர்த்தகமும்
5. கைத்தொழிலும் துணைச்சேவைகளும் (……)

**03.** வணிகத்தின்மீது செல்வாக்குச் செலுத்தும் சூழலும் அதற்கு உரித்தான காரணிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வணிகச் சூழல் | காரணிகள் |
|---|---|
| A. அகச் சூழல் | 1. பொருளாதாரம், பூகோளம் தொழில்நுட்பம் |
| B. வெளியகச் சூழல் | 2. உரிமையாளர்கள், ஊழியர்கள், முகாமையாளர்கள் |
| C. அண்மிய சூழல் | 3. வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள், வழங்குநர்கள் |
| | 4. உரிமையாளர்கள், போட்டியாளர்கள், அமைப்புக் கலாச்சாரம் |
| | 5. அமைப்புக் கலாச்சாரம், தொழில்நுட்பம், அமைப்பு முறை |

மேமற்குறிப்பிட்ட வணிகச்சூழலையும் அதற்குரிய காரணிகளையும் இணைக்கும்போது கிடைக்கப்பெறும் சரியான விடை

1. A – 2 , B – 1, C – 3
2. A – 4 , B – 1, C – 2
3. A – 2 , B – 3, C – 1
4. A – 5 , B – 1, C – 3
5. A – 3 , B – 4, C – 5 (……)

**04.** வரையறுக்கப்பட்ட சிறீதரன் நிறுவனம் கஷ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலை ஒன்றின் நோயாளிகளுக்கு 25 கட்டில்களை அன்பளிப்பு செய்ததுடன் தமது நிறுவனத்திலுள்ள ஊழியர்களுக்காக இலவச வைத்திய ஆலோசனை சேவையையும் வழங்கியது. கம்பனி செய்தது

1. சமூகத்திற்கும் சூழலுக்கும் உரித்தான சமூகப் பொறுப்பாகும்.
2. முதலீட்டாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் உரித்தான சமூகப் பொறுப்பாகும்.
3. முதலீட்டாளர்களுக்கும் சூழலுக்கும் உரித்தான சமூகப் பொறுப்பாகும்.
4. சமூகத்திற்கும் ஊழியர்களுக்கும் உரித்தான சமூகப் பொறுப்பாகும்.
5. சூழலுக்கும் ஊழியர்களுக்கும் உரித்தான சமூகப் பொறுப்பாகும். (……)

**05.** கீழே தரப்பட்டுள்ள அட்டவைணயில் X நிரலில் சர்வதேச தரங்கள் சிலவும், Y நிரலில் அவற்றால் உள்வாங்கப்படும் துறைகளும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A) ISO 9001 | 1. ஒழுங்கமைக்கப்பட்ட சுகாதாரமும் பாதுகாப்பும் பற்றிய முகாமைத்துவ துறை |
| B) ISO 14001 | 2. உணவு பாதுகாப்பு முகாமைத்துவத் துறை |
| C) ISO 22000 | 3. அமைப்பியல் சூழல் முகாமைத்துவத் துறை |
| D) OHSAS 18001 | 4. அமைப்பியல் தர முகாமைத்துவத்துறை |

1. A – 1, B – 2, C – 3, D – 4
2. A – 3, B – 4, C – 2, D – 1
3. A – 2, B – 3, C – 4, D – 1
4. A – 4, B – 3, C – 1, D – 2
5. A – 4, B – 3, C – 2, D – 1 (……)

**06.** கீழ்வரும் விடயங்களுள் நிதிக்கொள்கையுடன் தொடர்புடையது எது?

1. வருமானவரி வீதத்தினை உயர்த்துதல்
2. அரச நடைமுறைச் செலவைக் குறைத்தல்
3. வட்டி வீதத்தினை உயர்த்துதல்
4. வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறையைக் குறைத்தல்
5. அரச முதலீட்டுச் செலவை உயர்த்துதல் (……)

**07.** வணிக அமைப்புகள் மூன்றும் அவற்றுக்குரிய பண்புகள் சிலவும் உள்ளடக்கப்பட்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளன.

| வணிக அமைப்பு வகை | பொறுப்பு | வாழ்வுக்காலம் | சட்டப்படி தனியாள் |
|---|---|---|---|
| தனியுடைமை வணிகம் | A | தொடர்ச்சி இல்லை | D |
| கூட்டுறவு | வரையறுக்கப்பட்டது | C | உண்டு |
| வரையறுக்கப்பட்ட பொது கம்பனி | B | தோடர்ச்சியானது | E |

மேலே தரப்பட்ட அட்டவணையில் A,B,C,D,E ஆகிய இடைவெளிகளுக்குரிய பண்புகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

1. A- வரையறுக்கப்பட்ட B- வரையறுக்கப்படாத C- தொடர்ச்சியானது D- இல்லை E- இல்லை
2. A- வரையறுக்கப்படாத B- வரையறுக்கப்பட்ட C- தொடர்ச்சியானது D- இல்லை E- உண்டு
3. A- வரையறுக்கப்படாத B- வரையறுக்கப்பட்ட C- தொடர்ச்சி இல்லை D- இல்லை E- உண்டு
4. A- வரையறுக்கப்படாத B- வரையறுக்கப்பட்ட C- தொடர்ச்சியான D- உண்டு E- உண்டு
5. A- வரையறுக்கப்பட்ட B- வரையறுக்கப்படாத C- தொடர்ச்சி இல்லை D- உண்டு E- இல்லை (……)

**08.** 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படக்கூடிய பிரதான கம்பனி வகை மூன்று உள்ளடங்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க

1. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி, வரையறுக்கப்பட்ட தனியார்கம்பனி, பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி
2. வரையறுக்கப்பட்ட தனியார்கம்பனி, கரைகடந்த கம்பனி, பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி
3. வரையறுக்கப்பட்ட கம்பனி, கரைகடந்த கம்பனி, பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி
4. பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி, வரையறுக்கப்படாத கம்பனி, வெளிநாட்டுக் கம்பனி
5. வரையறுக்கப்பட்ட கம்பனி, வரையறுக்கப்படாத கம்பனி, பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி

(……)

**09.** வணிகர்கள் தொடர்பான தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன

A- நிமல் பங்குச் சந்தையில் பங்குகளைக் கொள்வனவு செய்தல் விற்பனை செய்தலில் ஈடுபட்டுள்ளார்

B- நிமாலி தந்தையிடமிருந்து கிடைத்த வணிகத்திற்கு புதிய சேவைகள் பலவற்றை ஒன்றிணைத்து நடத்திச் செல்கிறார்

C- அமாலி நிரிழிவு நோயாளிகளுக்குப் பொருத்தமான யோகட் வகை ஒன்றினை உற்பத்தி செய்கிறார்

D–அமல் வினையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்து சந்தைப்படுத்துகிறார்

E- பியல் அவரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழிநுட்ப முறையைப்பயன்படுத்தி வாகனச் சுத்தஞ்செய் நிலையமொன்றை (Service station) நடத்திச் செல்கின்றார்.

மேற்குறித்த வணிகர்களுள் முயற்சியாளர் எனக் கருதப்படக்கூடிய நபர்களின் தொகுதி

1. B, C உடன் E
2. A, B, உடன் C
3. B, D உடன் E
4. C, D உடன் E
5. A, C உடன் E (……)

**10.** பின்வருவனவற்றுள் அண்மிய பணத்திற்கு உட்படுபவற்றை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க

1. நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், வணிகத்தாள்கள்
2. நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், நடைமுறை வைப்புக்கள்
3. நடைமுறை வைப்புக்கள், வணிகத்தாள்கள் சேமிப்பு வைப்புக்கள்
4. திறைசேரி உண்டியல்கள், தாள், குற்றி நாணயங்கள், வணிகத்தாள்கள்
5. தாள் சில்லறை நாணயங்கள், நடைமுறை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், (……)

**11.** நிதி நிறுவனங்கள் சிலவும் அவற்றால் நிறைவேற்றப்படும் பணிகள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.

| நிறுவனங்கள் | பணிகள் |
|---|---|
| A- பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | சேமிப்பு வைப்புகளைப் பேணல், நிலையான வைப்புகளைப் பேணல், மத்திய நீண்டகால கடன்களை வழங்குதல் |
| B- உரிமம் பெற்ற வணிக வங்கி | முதலீட்டு முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்குதல் செயற்றிட்ட அறிக்கை தயாரித்தல், நிதி சந்தைப்படுத்தல் ஆலோசனைச் சேவை வழங்கல் |
| C- வுணிக வங்கி | கேள்வி வைப்புக்ளைப் பேணல் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடல், வங்கியாணை வசதிகளை வழங்கல் |
| D- உரிமம் பெற்ற விசேட வங்கி | குத்தகை கடன் நிதிவசதி, வாடகைக் கொள்வனவு, காணி சொத்து விற்பனை நடவடிக்கைகள் |

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களையும் அவற்றின் பணிகளையும் பொருத்துமிடத்து கி0டைக்கும் விடையைத் தெரிவுசெய்க.

1. A – 2, B – 4, C – 3, D – 1
2. A – 3, B – 1, C – 4, D – 2
3. A – 1, B – 2, C – 3, D – 4
4. A – 4, B – 3, C – 2, D – 1
5. A – 4, B – 1, C – 3, D – 2 (……)

**12.** காசோலை ஒன்றின் மின்காந்த மையப்பகுதி நிரலில் (MICR) காட்டும் இலக்கங்கள் ஒழுங்கு முறையில் காட்டியுள்ள விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

1. கணக்கு இலக்கம், காசோலை இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம்.
2. வங்கி இலக்கம், வங்கிக் கிளை இலக்கம். காசோலை இலக்கம், கணக்கு இலக்கம்.
3. காசோலை இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், கணக்கு இலக்கம்.
4. கணக்கு இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக் கிளை இலக்கம், காசோலை இலக்கம்,
5. காசோலை இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், கணக்கு இலக்கம், வங்கி இலக்கம். (……)

**13.** வணிகரொருவர் எதிர் நோக்கவேண்டியேற்படும் இடர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. உணவு பானவகை நஞ்சாவதால் நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்பு
2. மின்னொழுக்கினால் ஏற்படும் பாதிப்பு
3. மோட்டார் வாகனத்தினால் ஏற்படும் பாதிப்பு
4. பெருந்தெருக்களில் பொருட்களை எடுத்துச் செல்லும்போது ஏற்படும் பாதிப்பு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடர்கள் தொடர்பாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒப்பந்தங்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடைத் தொகுதி

1. பயணச்சரக்குக் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி, மூன்றாம் நபர் காப்புறுதி, பொதுமக்கள் பொறுப்புக்காப்புறுதி

2. பொதுமக்கள் பொறுப்புக்காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி, பூரண மோட்டார் வாகன காப்புறுதி, பயணச் சரக்குக் காப்புறுதி.

3. தீ அபாயக் காப்புறுதி பூரண மோட்டார் வாகன காப்புறுதி களவபாயக் காப்புறுதி, பயணச் சரக்குக் காப்புறுதி.

4. பொதுமக்கள் பொறுப்புக்காப்புறுதி, பூரண மோட்டார் வாகன காப்புறுதி, களவபாயக் காப்புறுதி, பயணச் சரக்குக் காப்புறுதி.

5. பொதுமக்கள் பொறுப்புக்காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி, பயணச் சரக்குக் காப்புறுதி, களவபாயக் காப்புறுதி,

(……)

**14.** தொடர்பாடலின் அடிப்படைகள் சில X நிரலிலும் அவ்வடிப்படைகள் பற்றிய விளக்கம் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A - அனுப்புபவர் | செய்தியைப் பெறுபவர் காட்டும் எதிர்விளைவு |
| B - பெறுபவர் | செய்தியை ஊடகத்திற்கு உட்படுத்துதல் |
| C - துலங்கல் | செய்தியைப் பெறுபவரிடமிருந்து அனுப்புபவருக்குக் கிடைக்கும் பதில் |
| D - பின்னூட்டல் | செய்தியை ஊடகத்திற்கு ஊடாகப் பெறுதல் |

மேலே Xஐயும் Yஐயும் சரியாகப் பொருத்துமிடத்து கிடைக்கும் விடைகளுள் சரியானது.

1. A – 1, B – 2, C – 3, D – 4
2. A – 2, B – 3, C – 4, D – 1
3. A – 3, B – 1, C – 4, D – 2
4. A – 4, B – 3, C – 1, D – 2
5. A – 2, B – 4, C – 1, D – 3

(……)

**15.** ABCD எனும் எழுத்துக்கள் மூலம் சர்வதேச வியபாரத்தில் பயன்படுத்தப்படும் அவணங்கள் சிலவும் 1, 2, 3, 4, எனும் இலக்கங்கள் மூலம் அவற்றின் முக்கியத்துவமும் காட்டப்பட்டுள்ளன.

| **ஆவணங்கள்** | **முக்கியத்துவம்** |
|---|---|
| A.நட்ட ஈட்டுக் கடிதம் | 1. ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமதியை ஏற்றுமதியாளருக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் |
| B.சுகநலக் சான்றுப் பத்திரரம் | 2. முன்னுரிமைத் தீர்வைச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள துணைபுரியும் |
| C.தோற்றுவாய்ச் சான்றிதழ் | 3. குற்றமுடைய சுமைச்சீட்டுக்குப் பதிலாக தூய சுமைச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளத் துணைபுரியும் |
| D. நாணயக் கடிதம் | 4. சில வகையான விவசாய உற்பத்திப் பொருட்களின் நுகர்வுத் தன்மையினை உறுதிப்படுத்தும் |

மேலே இரு நிரல்களையும் சரியாகப் பொருத்துமிடத்து கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க


1. A – 3, B – 4, C – 2, D – 1
2. A – 2, B – 3, C – 1, D – 4
3. A – 3, B – 4, C – 1, D – 2
4. A – 3, B – 1, C – 2, D – 4
5. A – 1, B – 2, C – 3, D – 4

(……)

16. “முகாமைத்துவம்” என்பதன் சரியான கருத்தினைத் தரும் கூற்றைத் தெரிவு செய்க

1. நிறுவனமொன்றினால் அடைந்துகொள்ள எதிர்பார்க்கின்ற குறிக்கோள், நோக்கம் என்பவற்றை உருவாக்குதலும் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கான உபாயங்களை நிலைநாட்டும் செயற்பாடாகும்.
2. அமைப்பொன்றின் குறிக்கோள், நோக்கம் என்பவற்றை வினைத்திறனாகவும், செயற்திறனாகவும், நிறைவேற்றிக் கொள்வதற்காக வளங்களையும் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் பகிர்ந்து கொள்ளும் செயற்பாடாகும்.
3. அமைப்பொன்றின் குறிக்கோள் நோக்கம் என்பவற்றை பயனுறுதிமிக்கதாய் நிறைவேற்றிக் கொள்வதற்கு அமைப்பின் வளங்களை வினைதிறனாய் ஈடுபடுத்தும் செயலொழுங்காகும்.
4. அமைப்பின் குறிக்கோள், நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளில் நபர்களை ஈடுபடுத்தவது தொடர்பாக வற்புறுத்துவதும் செல்வாக்குச் செலுத்துவதுமான செயலொழுங்காகும்.
5. அமைப்பொன்றின் குறிக்கோள் நோக்கம் நிறைவேற்றப்படும் முறைமில் திட்டம் சரியான முறைமில் அமுல்படுத்தப்படுகிறதா? ஏன்பதனைப் பரிசீலிப்பதன் மூலம் வேறுபாடுகள் இருப்பின் அவற்றை சரிப்படுத்தும் செலலொழுங்காகும். (……)

17. வணிக நிறுவனமொன்றின் ஒழுங்கமைத்தல் குறிப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதி கீழே காட்டப்பட்டுள்ளது.




இந்நிறுவனத்தில் திணைக்களப்படுத்தலுக்கு அடிப்படையாவது

1. கொடுக்கல் வாங்கல் அடிப்படையாகும்
2. பூகோள அடிப்படையாகும்
3. உற்பத்தி அடிப்டையாகும்
4. தொழிற்பாட்டு அடிப்படை
5. கலப்பு அடிப்டையாகும் (……)

18. முகாமைத்துவ அடிப்படைகளுக்குரிய பணிகள் சில கீழே தரப்படுகின்றன.

A. வேலைப் பகிர்வு
B. தொடர்பாடல்
C. நியமங்களை உருவாக்குதல்
D. ஊக்குவித்தல்
E. ஒருமுகப்படுத்தல்
F. திணைக்களப்படுத்தல்
G. தலைமைத்துவம்
H. மாற்றுமதிப்பு

மேலே குறிப்பிட்ட பணிகளுள் நெறிப்படுத்தலுக்குரிய பணிகளாவன


1. A, B உடன் D
2. B, D உடன் G
3. B, C உடன் H
4. C, D உடன் F
5. E, F உடன் G (……..)

19. உற்பத்தி நிறுவனமொன்றின் முழு நிலையான கிரயம் ரூபா மில்லியன் 2. விற்பனை வருமானம் ரூபா மில்லியன் 10. விற்பனை அலகுகளின் எண்ணிக்கை 1000, முழு கூலிக்கிரயம் மில்லியன் 3, முழு நேர்பொருள் கிரயம் மில்லியன் 2

ஆயின் சமப்பாட்டுப் புள்ளிக்குரிய அலகு எவ்வளவு?

1. 400 அலகுகள் ஆகும்
2. 2000 அலகுகள் ஆகும்
3. 4000 அலகுகள் ஆகும்
4. 20,000 அலகுகள்
5. 40,000 அலகுகள் (………)

**20.** ஒரு நிறுவனத்தின் சரக்கிருப்பின் அளவினைக் காட்டும் வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.




மேலே தரப்பட்ட வரைபில் A, B, C, D, E, எழுத்துக்கள் ஒழுங்குமுறையில் காட்டுவது

1. மறுகட்டளையிடல் மட்டம் இழிவுச்சரக்கு மட்டம் உச்சச் சரக்குமட்டம், பாதுகாப்பு இருப்பும் மறுகட்டளையிடல் மட்டமும் ஆகும்.
2. பாதுகாப்பு இருப்பும் இழிவுச்சரக்கிருப்பு மட்டமும் மறுகட்டளையிடல் மட்டம், மறுகட்டளையிடல் அளவும் உச்ச சரக்கிருப்பு மட்டமும் ஆகும்
3. இழிவுச் சரக்கிருப்பு மட்டம், மறுகட்டளையிடல் மட்டம், பாதுகாப்பு இருப்பு, மறுகட்டளையிடல் தொகையும் உச்ச சரக்கிருப்பு மட்டமும் ஆகும்.
4. இழிவுச் சரக்கிருப்பு மட்டம், மறுகட்டளையிடல் மட்டம், மறுகட்டளையிடல் தொகை, பாதுகாப்பு இருப்பு, உச்ச சரக்கிருப்பு மட்டமும் ஆகும்.
5. பாதுகாப்பு இருப்பு, மறுகட்டளையிடல் தொகை, இழிவுச்சரக்கிருப்பு மட்டம், மறுகட்டளையிடல் மட்டமும் உச்ச சரக்கிருப்பு மட்டமும் ஆகும்.

(……….)

**21.** உற்பத்தியொன்று பல்வேறு பெறுமானங்களை இணைக்கும் விதத்தில் சந்தைக்கு முன்வைக்கப்படும் மட்டங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

A மேம்படுத்தல் உற்பத்தி

B அடிப்படை உற்பத்தி

C எதிர்பார்ப்பு உற்பத்தி

D மூல நலன்

E சாத்திய உற்பத்தி (………)

மேலே தரப்பட்ட மட்டங்களை ஒழுங்குமுறையில் பொருத்துமிடத்து கிடைக்கும் சரியான விடையைக் கொண்டமைந்த தொகுதியைத் தெரிவுசெய்க.

1. B, C, A, D உடன் E
2. D, B, A, E உடன் C
3. B, D, C A உடன் E
4. D, B,E, A உடன் C
5. D, B, C, A உடன் E

(……….)

22 வணிக நிறுவனங்கள் தங்களுக்குச் சார்பான வாடிக்கையாளர்களை வென்றெடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் விலையிடல் முறையாவது

1. பெறுமதியின் அடிப்படையில் விலையிடல்
2. சாரம் உறிஞ்சல் விலையிடல்
3. இலக்கினை எய்தும் விலையிடல்
4. குறிக்கப்பட்ட விலையிடல் முறைமை
5. சந்தை விலையடிப்படையிலான விலையிடல் முறை (.........)

23 மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றின் முன்னால் பின்வரும் கூற்று காட்சிப்படுத்தப்பட்டிருந்தது

**"ஒவ்வொரு மோட்டார் சைக்கிளுடனும் பெறுமதியான ஒரு தலைக்கவசம் (Helmet) இலவசம்"**

மேலே குறிப்பிடப்பட்ட கூற்றின்மூலம் இடம்பெறுவது

1. தனிப்பட்ட விற்பனையாகும்
2. சந்தை மேம்படுத்தலாகும்
3. நேர்ச் சந்தைப்படுத்தலாகும்
4. வாடிக்கையாளர் மேம்படுத்தலாகும்
5. விற்பனை ஊழியர் மேம்படுத்தலாகும் (..........)

24 நிதியீட்டல் வழிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன

A. நிறுத்தி வைத்தலாபம்
B. பங்கு ஆணைப்பத்திரம்
C. வணிகத்தாள்
D. வங்கி மேலதிகப் பற்று

பல்வேறு நியதிகளின் கீழ் மேலே தரப்பட்டுள்ளவற்றை வகைப்படுத்தும்போது பின்வரும் எவ்விடை சரியானதாகும்

1. A , D என்பன உள்வாரியானதும், B யும் C யும் வெளிவாரியானதுமான நிதியீட்டல் முறைகளாகும்.
2. A , B என்பன நேர் நிதியீட்டலும், C யும் D யும் குறுங்கால நிதியீட்டல் முறைகளாகும்.
3. A , C என்பன நேர் நிதியீட்டலும், B யும் D யும் வெளிவாரியான நிதியீட்டல் முறைகளாகும்.
4. A , D என்பன உள்வாரியானதும், B யும் C யும் நேரில் நிதியீட்டல் முறைகளாகும்.
5. A , B என்பன நேரில் நிதியீட்டலும், C யும் D யும் நேரில் நிதி திரட்டல் வழிமுறைகளுமாகும்.

(........)

25 நிதி விகிதங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. நடைமுறை விகிதம்
B. வட்டிக் காப்பு விகிதம்
C. முதலீட்டுக்கான வருவாய் விகிதம்
D. இருப்பு புரள்வு விகிதம்
E. உரிமை மூலதன வருவாய் விகிதம்
F. கடன்பட்டோர் புரள்வு விகிதம்
G. கடன் உரிமை விகிதம்
H. மொத்தச் சொத்துப் புரள்வு விகிதம்

மேற்குறிப்பிட்டவற்றுள் செயற்பாட்டு விகிதத்தற்குட்படுவது (Activity Ratio)

1. A, B உடன் C
2. D, C உடன் E
3. A, C உடன் H
4. B, E உடன் F
5. D, F உடன் H

(…….)

**26** அரசுக்குத் தேவையான குறுங்கால் நிதியினைத் திரட்டிக்கொள்வதற்காக வெளியிடும் முறி

1. ரூபாய்க் கடன் முறி
2. வைப்புச் சான்றிதழ்
3. திறைசேரி உண்டியல்கள்
4. வணிகத்தாள்
5. திறைசேரி முறி (…….)

**27** நிச்சயிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்திற்குரிய கடமைகள் பொறுப்புக்களை தொகுதியாக்குதல் குறிக்கப்படுவது

1. தொழில் உருவாக்கம்
2. தொழில் விளக்கம்
3. தொழிற்பகுப்பு
4. தொழிற்கிரயம்
5. தொழில் மதிப்பீடு (…….)

**28** ஊழியர்களுக்குச் செயலூக்கமளிப்பதற்காக வழங்கப்படும் நிதி சாராத நன்மைகளை உள்ளடக்கிய தொகுதி எது?

1. குறைந்த வட்டிக் கடன் வழங்கல், இலவச வீடமைப்பு, சுகயீன லீவு வழங்கல்.
2. மிகையூதியக் (உபகார) கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு, இலவசப் பிரயாண வசதி
3. ஓய்வு அறை வசதி, வைத்திய வசதிகள், மேலதிக நேரக் கொடுப்பனவு
4. உணவும் குடிவகையும், வைத்திய வசதிகள், பிரயாண வசதிகள்
5. பொருட்கள் சேவைகள் குறைந்த விலைக்கு வழங்கல், ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதி

(………)

**29** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் X நிரலில் பயன்படுத்தப்படும் அளவின் அடிப்படையில் தகவல் முறைமை காணப்படுவதோடு Y நிரலில் தகவல் முறைமையைப் பரிசீலிக்கும் நபர்கள் காணப்படுகிறார்கள்.

| X | Y |
|---|---|
| A தந்திரோபாய முறை | 1. கணக்கு இலிகிதர்கள் |
| B முகாமைத்துவ அளவு | 2. பிரதம நிறைவேற்று அதிகாரி |
| C அறிவளவு | 3. பரிசீலனையாளர்கள் |
| D நெறிப்படுத்தல் அளவு | 4. மத்தியதர முகாமையாளர்கள் |

X நிரலை Y நிரலுடன் பொருத்துமிடத்து கிடைக்கும் சரியான விடையாக அமைவது

1. A -2, B -4, C-1, D-3
2. A -2, B -3, C-1, D-4
3. A -4, B -2, C-1, D-3
4. A -2, B -4, C-3, D-1
5. A -3, B -4, C-1, D-2 (……)

30 கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் X நிரலில் வணிகத்திட்டத்தின் உள்ளடக்கங்களும், Y நிரலில் அவற்றின் முக்கியத்துவமும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y | |
|---|---|---|
| A கட்டளைச் சுருக்கம் | 1. | தனது உற்பத்திக்கு விருத்தியுறும் சந்தை உண்டாகும் என்பதைக் காட்டும் |
| B சந்தைப்படுத்தல் திட்டம் | 2. | உற்பத்திச் செயலொழுங்கு தொடர்பான விளக்கத்தைப் பெற்றுத்தரும் |
| C செயற்பாட்டுத்திட்டம் | 3. | வணிக நடவடிக்கைகளுக்கு அவசியமான நிதிப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களையும், நிதிப்பாய்ச்சல் தொடர்பான தகவல்களையும் பெற்றுத்தரும் |
| D நிதித் திட்டம் | 4. | நிறுவனத்தின் ஊழியர் தேவைப்பாட்டை அறிந்து அதற்குத் தக்கவாறு வழிகாட்டும் |
| E மனித வளத் திட்டம் | 5. | வணிகத்திட்டம் பற்றிய வழிகாட்டலைச் செய்யும் |

X நிரலை Y நிரலுடன் பொருத்துமிடத்து கிடைக்கும் சரியான விடையாக அமைவது

1. A -5, B -1, C-3, D -2, E – 4
2. A -5, B -1, C-2, D -3, E - 4
3. A -2, B -1, C-3, D -4, E -5
4. A -3, B -2, C-1, D -5, E - 4
5. A -5, B -3, C-4, D -1, E – 2 (……..)

**31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக**

31 இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக வணிகத்தினால் முழுமையான சமூகத்திற்கு நியாயம் கிடைக்க கூடியதான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ……………………………………… என அழைக்கப்படுவதோடு தன்னுடன் செயற்படும் சகல கட்சியினருக்கும் நன்மை கிடைக்கக்கூடியவாறு செயற்படுதல் ……………………… என அழைக்கப்படும்.

32 அரச வருமானத்தை …………………………….. எனவும், …………………………………… எனவும் வகைப்படுத்த முடிவதோடு அரச செலவினத்தை …………………………….. எனவும், …………………………………… எனவும் வகைப்படுத்தலாம்.

33 (அ) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் கம்பனியொன்றை பதிவுசெய்வதற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய பிரதான ஆவணம் ……………………………………………… ஆகும்

(ஆ) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி கம்பனிப் பதிவாளரால் வழங்கப்படும் ஆவணம் ……………………………………………… ஆகும்

34 (அ) முயற்சியாளனின் அடிப்படைப் பணியானது ………………………………………… ஆகும்
(ஆ) கைத்தொழிலினுள் தனது செல்வாக்கைப் பரப்ப முடியாத வணிகம் …………………………………………… என அழைக்கப்படும்.

35 வங்கி மேலதிக பற்று ………………………………….. என்றும், ………………………………… என்றும் இருவகைப்படும்.

36 வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் ……..……………………………………… , ……………………………………………. , ………………………………………………… ஆகிய நாடுகள் உள்ளடங்கும்

37 (அ) ஒருவர் ஒரு முதல்வருக்கு மட்டும் பொறுப்புக் கூறவேண்டும் என்ற கோட்பாடு ……………………………………….. என அழைக்கப்படும்.
(ஆ) ஒரு முகாமையாளரின் கீழ் கடமையாற்றக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கை ……………………………….. என அழைக்கப்படும்.

38 ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட புதிய ஊழியர் அப்பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன் கடமையாற்ற வேண்டிய காலம் ……………………………… எனப்படுவதோடு தொழினுட்பப் பணிக்காக நியமிக்கப்பட்ட ஊழியர் ஒருவர் பயிற்சிக்காகச் செலவிடவேண்டிய காலம் …………………………………………… எனப்படும்.

39 (அ) இணையத்தளத்திலுள்ள தரவுத் தளத்தினுள் உட்பிரவேசிக்கப் பயன்படும் உபகரணம் ………………………………… என அழைக்கப்படும்.
(ஆ) தீர்மானமெடுத்தல் கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்குத் துணை புரியும் தகவல் முறைமை ……………………………………………….. எனப்படும்.

40 நிதித்திட்டத்தில் காணப்படும் மதிப்பிடப்பட்ட செயற்றிட்டக் கிரயம் …………………………………….. ……………………………………….. உம் ………………………………………………… என்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

**41 முதல் 50 வரையிலான வினாக்களுக்கு சுருக்கமான நிச்சயமான விடைகளை எழுதுக**

41 வணிகச் செயற்பாட்டிற்குட்பட்ட பணிகள் நான்கினைப் பெயரிடுக

1. ……………………………………………………………………………
2. ……………………………………………………………………………
3. ……………………………………………………………………………
4. ……………………………………………………………………………

42 வுணிகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வணிகரொருவர் இனங்காணக்கூடியவை

1. ……………………………………………………………………………
2. ……………………………………………………………………………
3. ……………………………………………………………………………
4. ……………………………………………………………………………

**43** சர்வதேச நுகர்வோர் சங்க சம்மேளனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் நான்கைக் குறிப்பிடுக

1. …………………………………………………………………………
2. …………………………………………………………………………
3. …………………………………………………………………………
4. …………………………………………………………………………

**44** அங்கீகாரமளிக்கப்பட்ட வணிக வகைகள் மூன்றைப் பெயரிடுக

1. …………………………………………………………………………
2. …………………………………………………………………………
3. …………………………………………………………………………

**45** முயற்சியாண்மைச் செயற்பாட்டின் படிமுறைகள் நான்கினைப் குறிப்பிடுக

1. …………………………………………………………………………
2. …………………………………………………………………………
3. …………………………………………………………………………
4. …………………………………………………………………………

**46** சிறந்த போக்குவரத்து முறையொன்றில் காணப்படவேண்டியப பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………
2. …………………………………………………………………………
3. …………………………………………………………………………
4. …………………………………………………………………………

**47** செயற்பாட்டுக் கிரயத்திட்டத்தின் நான்கு வகைகளைப் பெயரிடுக

1 …………………………………………………………………………
2. …………………………………………………………………………
3. …………………………………………………………………………
4. …………………………………………………………………………

**48** சிறந்த சந்தைத் துண்டமொன்றுக்கு இருக்க வேண்டிய தேவைப்பாடுகள் நான்கைப் பெயரிடுக

1.…………………………………………………………………………
2. …………………………………………………………………………
3. …………………………………………………………………………
4. …………………………………………………………………………

**49** பணச் சந்தைக்குரிய உபசந்தைகள் நான்கைப் பெயரிடுக

1. ………………………………………………………………………………
2. ………………………………………………………………………………
3. ………………………………………………………………………………
4. ………………………………………………………………………………

**50** (அ) இரண்டு ஊடகங்கள் அல்லது அதனிலும் கூடிய எண்ணிக்கையிலான கணனிகளை ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்கு வழங்கப்படும் பெயர் யாது?

1. ……………………………………………………………………………

(ஆ) நிறுவனத்தினுள் தகவல் தொடர்பாடலுக்காகப் தயாரிக்கப்படும் கணனி வலையமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்.

1. ……………………………………………………………………………………………………..

***